செய்தி வெளியீடு எண். 54 நாள் 26.01.2018

# 69-வது குடியரசு தினத்தையொட்டி, திருவள்ளூர் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி,இ.ஆ.ப., அவர்கள் தேசிய கொடியை ஏற்றி வைத்து, மரியாதை செலுத்தி, காவல் துறையினரின் அணிவகுப்பு மரியாதையை ஏற்றும், சுதந்திர போராட்ட வீரர்களை கௌரவித்தும் 130 பயனாளிகளுக்கு ரூ. 83 இலட்சத்து 93 ஆயிரத்து 790 மதிப்பிலான அரசு நலத்திட்ட உதவிகளையும், சிறப்பாக பணிப்புரிந்த பல்வேறு துறை அலுவலர்களுக்கு நினைவு பரிசு மற்றும் பாராட்டுச் சான்றிதழ்களையும் வழங்கினார்

திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக பெருந்திட்ட வளாகத்தில் அமைந்துள்ள விளையாட்டு மைதானத்தில் 69-வது குடியரசு தினவிழாவில் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி, இ.ஆ.ப., அவர்கள் தேசிய கொடியை ஏற்றி வைத்து மரியாதை செலுத்தி, வண்ண பலூன்களையும், வெண்புறாக்களை பறக்க விட்டு, காவல் துறையின் அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக் கொண்டு, சுதந்திர போராட்ட வீரர்களை கௌரவிக்கும் வகையில் சால்வை அணிவித்து, பரிசுகளையும், பாராட்டுச் சான்றிதழ்களையும், மாற்றுத்திறனாளி குழந்தைகளுக்கு இனிப்புகள் வழங்கி, அரசின் பல்வேறு துறைகளின் வாயிலாக 130 பயனாளிகளுக்கு ரூ.83 இலட்சத்து 93 ஆயிரத்து 790 மதிப்பிலான அரசு நலத்திட்ட உதவிகளை இன்று (26.01.2018) வழங்கினார்.

பல்வேறு அரசுத்துறைகளில் சிறப்பாக பணியாற்றிய அரசு அலுவலர்கள், காவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கு நினைவு பரிசுகளையும் மற்றும் பாராட்டுச் சான்றிதழ்களையும் வழங்கி பாராட்டுகளை தெரிவித்தார்.

இதில் 9 முன்னாள் இராணுவ வீரர்களுக்கு ரூ. 2,25,000-க்கான உதவித் தொகையும், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம் சார்பாக 5 பயனாளிகளுக்கு ரூ.17 ஆயிரம் மதிப்பில் விலையில்லா தையல் இயந்திரங்களும், சமூக நலத்துறை சார்பாக 15 பயனாளிகளுக்கு ரூ.7,50,000-ம் மதிப்பில் இரண்டு பெண் குழந்தைகள் திட்டத்தில் ஆணையையும், மாவட்ட மேலாளர், தாட்கோ சார்பில் 3 பயனாளிகளுக்கு ரூ.30,32,284-ம் மதிப்பில் வாகனமும், சமூக பாதுகாப்பு திட்டத்தின் சார்பாக 4 பயனாளிகளுக்கு ரூ.32 ஆயிரம் மதிப்பில் திருமணத் உதவித்தொகையும், சமூக பாதுகாப்பு திட்டத்தின் கீழ் 10 பயனாளிகளுக்கு ரூ.1,59,500 மதிப்பில் இயற்கை மரணத்தின் ஈமச்சடங்குக்கான உதவித்தொகையும், 10 பயனாளிகளுக்கு முதியோர் மற்றும் விதவை உதவித்தொகைக்கான ஆணையையும், மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை சார்பாக 5 பயனாளிகளக்கு ரூ. 22,745 மதிப்பில் விலையில்லா சலவை பெட்டிகளும், மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நலத்துறை சார்பாக 5 பயனாளிகளுக்கு ரூ.75,315 மதிப்பில் பல்வேறு உபகரணங்களையும், வேளாண்மைத்துறை சார்பாக 10 பயனாளிகளுக்கு ரூ. 1,10,810 மதிப்பில் பல்வேறு உபகரணங்களும், வேளாண் பொறியியல் துறை சார்பாக 2 பயனாளிகளுக்கு ரூ. 2,01,888 மதிப்பில் உபகரணங்களும், தோட்டக்கலைத் துறை சார்பில் 4 பயனாளிகளுக்கு ரூ.2,248-க்கான உபகரணங்களும், முதலமைச்சர் சாலை விபத்து நிவாரண நிதியின் கீழ் 48 பயனாளிகளுக்கு ரூ. 37,65,000-க்கான தொகையும் என மொத்தம் 130 பயனாளிகளுக்கு ரூ.83 இலட்சத்தி 93 ஆயிரத்தி 790 மதிப்பில் அரசு நலத்திட்ட உதவிகளையும் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் வழங்கினார்.

திருவள்ளூர் செயின்ட் ஆனிஸ் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி, திருவள்ளூர் டி.ஆர்.பி.சி.சி.சி. இந்து மேல்நிலைப்பள்ளி, திருவள்ளூர் ஸ்ரீநிகேதன் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி, திருவள்ளூர் ஞானவித்யாலயா மேல்நிலைப்பள்ளி, திருவள்ளூர் ஆர்.எம்.ஜெயின் அரசு மகளிர் மேல்நிலைப்பள்ளி, திருவள்ளூர் சி.எஸ்.ஐ. கௌடி மேல்நிலைப்பள்ளி ஆகிய பள்ளிகள் கலை நிகழ்ச்சியில் பங்கேற்ற பள்ளி மாணவ, மாணவிகளுக்கு பரிசுகளையும் சான்றிதழ்களையும் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.எம்.ஆர். சிபி சக்கரவர்த்தி, மாவட்ட வருவாய் அலுவலர் திரு.கே.முத்து, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திரு.ச.சா.குமார், வருவாய் கோட்டாட்சியர்கள், துணைக்காவல் கண்காணிப்பாளர்கள், வட்டாட்சியர்கள், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் மற்றும் பல்வேறு துறை உயர் அலுவலர்கள் (ம) அலுவலர்கள், பள்ளி மாணவ, மாணவியர்கள் மற்றும் திரளான பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், திருவள்ளூர்.**